ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ா ஹ்ரு'தி₃ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ நல்குரவும் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நல்குரவும் ॥

தம்மை வசிகரித்தவன் சர்வேச்வரன் எனல்

‡நல்குரவும் செல்வும்⋆ நரகும் சுவர்க்கமுமாய்⋆
வெல்பகையும் நட்பும்⋆ விடமும் அமுதமுமாய்⋆
பல்வகையும் பரந்த⋆ பெருமான் என்னை ஆள்வானை⋆
செல்வம் மல்கு குடி⋆ திருவிண்ணகர் கண்டேனே (1)

கண்ட இன்பம் துன்பம்⋆ கலக்கங்களும் தேற்றமுமாய்⋆
தண்டமும் தண்மையும்⋆ தழலும் நிழலுமாய்⋆
கண்டு கோடற்கரிய⋆ பெருமான் என்னை ஆள்வான் ஊர்⋆
தென் திரைப் புனல் சூழ்⋆ திருவிண்ணகர் நன்னகரே (2)

நகரமும் நாடுகளும்⋆ ஞானமும் மூடமுமாய்⋆
நிகரில் சூழ் சுடராய் இருளாய்⋆ நிலனாய் விசும்பாய்⋆
சிகர மாடங்கள் சூழ்⋆ திருவிண்ணகர் சேர்ந்த பிரான்⋆
புகர்கொள் கீர்த்தி அல்லால் இல்லை⋆ யாவர்க்கும் புண்ணியமே (3)

புண்ணியம் பாவம்⋆ புணர்ச்சி பிரிவென்றிவையாய்⋆
எண்ணமாய் மறப்பாய்⋆ உண்மையாய் இன்மையாய் அல்லனாய்⋆
திண்ண மாடங்கள் சூழ்⋆ திருவிண்ணகர் சேர்ந்த பிரான்⋆
கண்ணன் இன் அருளே⋆ கண்டு கொண்மின்கள் கைதவமே (4)

கை தவம் செம்மை⋆ கருமை வெளுமையுமாய்⋆
மெய்பொய் இளமை முதுமை⋆ புதுமை பழமையுமாய்⋆
செய்த திண் மதிள் சூழ்⋆ திருவிண்ணகர் சேர்ந்த பிரான்⋆
பெய்த காவு கண்டீர்⋆ பெரும் தேவுடை மூவுலகே (5)

மூவுலகங்களுமாய் அல்லனாய்⋆ உகப்பாய் முனிவாய்⋆
பூவில் வாழ் மகளாய்⋆ தவ்வையாய்ப் புகழாய் பழியாய்⋆
தேவர் மேவித்தொழும்⋆ திருவிண்ணகர் சேர்ந்த பிரான்⋆
பாவியேன் மனத்தே⋆ உறைகின்ற பரஞ்சுடரே (6)

பரஞ்சுடர் உடம்பாய்⋆ அழுக்கு பதித்த உடம்பாய்⋆
கரந்தும் தோன்றியும் நின்றும்⋆ கை தவங்கள் செய்யும்⋆ விண்ணோர்
சிரங்களால் வணங்கும்⋆ திருவிண்ணகர் சேர்ந்த பிரான்⋆
வரங்கொள் பாதம் அல்லால் இல்லை⋆ யாவர்க்கும் வன் சரணே (7)

வன் சரண் சுரர்க்காய்⋆ அசுரர்க்கு வெம் கூற்றமுமாய்⋆
தன் சரண் நிழற்கீழ்⋆ உலகம் வைத்தும் வையாதும்⋆
தென் சரண் திசைக்குத்⋆ திருவிண்ணகர் சேர்ந்த பிரான்⋆
என் சரண் என் கண்ணன்⋆ என்னை ஆளுடை என் அப்பனே (8)

‡என் அப்பன் எனக்காய் இகுளாய்⋆ என்னைப் பெற்றவளாய்⋆
பொன்னப்பன் மணியப்பன்⋆ முத்தப்பன் என் அப்பனுமாய்⋆
மின்னப் பொன் மதிள் சூழ்⋆ திருவிண்ணகர் சேர்ந்தவப்பன்⋆
தன்னொப்பார் இல்லப்பன்⋆ தந்தனன் தன தாள் நிழலே (9)

நிழல் வெய்யில் சிறுமை பெருமை⋆ குறுமை நெடுமையுமாய்⋆
சுழல்வன நிற்பன⋆ மற்றுமாய் அவை அல்லனுமாய்⋆
மழலை வாய் வண்டு வாழ்⋆ திருவிண்ணகர் மன்னு பிரான்⋆
கழல்கள் அன்றி⋆ மற்றோர் களைகண் இலம் காண்மின்களே (10)

‡காண்மின்கள் உலகீர்! என்று⋆ கண்முகப்பே நிமிர்ந்த⋆
தாள் இணையன் தன்னைக்⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
ஆணை ஆயிரத்துத்⋆ திருவிண்ணகர்ப் பத்தும் வல்லார்⋆
கோணையின்றி விண்ணோர்க்கு⋆ என்றுமாவர் குரவர்களே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com